செய்தி வெளியீடு **நாள்: 19.12.2024**

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் சி.எம்.டி.ஏ சார்பில் பல்வேறு நூலகங்களை மேம்படுத்தி முதல்வர் படைப்பகம் (பகிர்ந்த பணியிடம் மற்றும் கல்வி மையம்) **அமைப்பது தொடர்பாகவும், சாலை சந்திப்பு மேம்பாடுகள் மற்றும் சுரங்க பாதைகளை அழகுபடுத்துதல் (Libraries Development, Junction Improvements & Subways Beautification) தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (19.12.2024) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் 2024-2025 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதிய நிலை குறித்தும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் பல்வேறு நூலகங்களை மேம்படுத்தி **முதல்வர் படைப்பகம்** (பகிர்ந்த பணியிடம் மற்றும் கல்வி மையம்) அமைப்பது தொடர்பாகவும், சாலை சந்திப்பு மேம்பாடுகள் மற்றும் சுரங்க பாதைகளை அழகுபடுத்துதல் (Libraries Development, Junction Improvements & Subways Beautification) தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதற்கு முன்னர் சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சாதனைகள் அடங்கிய காபி டேபிள் புத்தகத்தை (Coffee Table Book) வெளியிட்டார்கள்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.நா.பாலமுருகன், முதுநிலை திட்ட அமைப்பாளர் திருமதி.அனுஷியா, செயற்பொறியாளர் திருமதி.விஜயகுமாரி, சென்னை மாவட்ட நூலக அலுவலர் திருமதி.கவிதா, திட்ட ஆலோசகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Verified @ RealEstate ™